**செ.வெ.எண்: 25** **நாள்: 09.03.2017**

# தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 8.3.2017 அன்று நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்து காசோலைகளை வழங்கி கூறியதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பில் 2015-16ம் ஆண்டிற்கான தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் செல்வன். ஏ.செல்வராஜ் கர்நாடகா மாநிலம் பெங்களூரில் 12.12.2015 முதல் 13.12.2015 முடிய நடைபெற்ற தேசிய ட்வார்ப் தடகள சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் (தங்கப்பதக்கம்) பெற்றார். மேலும் செல்வி.சி.சிவரஞ்சனி சத்தியமங்கலத்தில் 22.05.2015 முதல் 26.05.2015 முடிய நடைபெற்ற தேசிய அளவிலான சப் ஜ-ூனியர் பவர்லிப்டிங் சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொணடு இரண்டாமிடம் (வெள்ளி பதக்கம்) பெற்றார். செல்வி.ஆர்.ஜீவீதா சென்னையில் 16.01.2016 முதல் 19.01.2016 முடிய நடைபெற்ற தேசிய அளவிலான கிராமிய விளையாட்டுப் போட்டிகளில் குத்துச்சண்டை விளையாட்டில் கலந்து கொண்டு மூன்றாமிடம் (வெண்கலப்பதக்கம்) பெற்றார்.

மேலும் செல்வி.பி.ஜஸ்வர்யா புனேயில் 03.02.16 முதல் 07.02.16 முடிய நடைபெற்ற 61வது தேசிய அளவிலான பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் டேக்வாண்டோ விளையாட்டில் கலந்து கொண்டு மூன்றாமிடம் (வெண்கலப்பதக்கம்) பெற்றார். செல்வி.எம்.சாந்தாயி ஆந்திர பிரதேஷ் மாநிலம் காக்கிநாடாவில் 24.09.2015 முதல் 26.09.2015 முடிய நடைபெற்ற 27 வது தென்மண்டல அளவிலான இளையோர் தடகள சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு மூன்றாமிடம் (வெண்கலப்பதக்கம்) பெற்று சாதனை புரிந்துள்ளனர். இந்த வீரர், விராங்கனைகளுக்கு முதல், இரண்டு, மூன்றாம் பரிசு ஆகியவற்றிற்கு முறையே தலா ரூ.6000, தலா ரூ.4000, தலா ரூ.2000க்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று தொடர்ந்து சிறப்பாக விளையாடி நமது மாநிலத்திற்கும், நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.சா. வாஞ்சிநாதன், மாவட்ட உடற்கல்வி ஆய்வர்(பொ) திரு.தங்கராஜ், பயிற்சியாளர் திரு.எஸ்.செந்தில்கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**